## ஆட்சியாளர்களின் கண்டுகொள்ளாமை

தற்பொழுது நமது நாட்டையும் மாநிலத்தையும் ஆண்டுவரும் அரசுகள் ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசி மக்களைக் கவர்ந்து ஆட்சிக்கு வந்தனவே தவிர, சாதாரண மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு குறிப்பிடும்படியாக எதுவுமே செய்திடவில்லை. முன்னேற்றம் என்று விளம்பரம் செய்யப்படுவதெல்லாம் பெருமுதலாளிகள் சார்புடையதாக இருப்பதைத்தான் கண்கூடாகக் காண்கிறோம். இருந்த வேலைவாய்ப்பு களையும் இழந்து, புதிய வேலைகள் இல்லை என்ற ஏமாற்றம் மக்களைச் சூழ்ந்திருக்கிறது. இந்நிலையில், மிக பொறுப்புணர்வோடு நாம் கடமையாற்ற அழைக்கப்படுகிறோம்.

பசியாய் இருப்போருக்கு உணவு வழங்குவதில் நமதாண்டவர் இயேசு கண்ணும் கருத்துமாய்ச் செயல்பட்டார். அப்பம் பகிர்ந்தளித்தார், சமபந்தியை நேர்நிலையாகக் கண்டார், சட்டத்திற்குப் புறம்பாயிருந்தாலும் கதிர் கொய்து சாப்பிட அனுமதித்தார், தனது சீடர்களுக்குத் தனது கைகளாலேயே உணவு சமைத்து வழங்கினார். உச்சமாக, தனது இறுதி இரவு உணவின்போது தனது உடலையும் இரத்தத்தையுமே உணவாக விட்டுச் சென்றார் என்பதெல்லாம் மக்கள் வயிறார உண்ண வேண்டுமென்பதில் அவருக்கிருந்த அக்கறையைத்தான் காட்டுகிறது. பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும், ஏன் எல்லா மக்களுக்கும் வயிறார உணவு கிடைக்கக் குரல் கொடுப்பது திருஅவையின் கடமையாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு

பசியில்லா உலகம் உருவாகவும், சமத்துவ சமுதாயம் மலரவும் வேண்டுமானால் அனைத்துத் துறைகளிலும் பாலின சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என ஆய்வுகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன. ஆற்றல் பறிக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட பெண்ணினத்தை மையப்பகுதிக்குக் கொண்டுவந்து ஆற்றல் பெறச் செய்வது நமது செயல்பாட்டுக் கடமையாகிறது.

இதனை உணர்ந்துதான் நமது கோட்டாறு திருஅவை, 1989 ஆம் ஆண்டு மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழுவை உருவாக்கிப் பெண்களின் பங்கேற்பையும் தலைமைத்துவத்தையும் வளர்த்தெடுக்க முற்பட்டது. பெண் விடுதலை, பெண்ணிய இறையியலாக்கம், பெண்ணியப் பார்வையில் விவிலியத்திற்கு விளக்கமளித்தல், துன்பப்படுகின்ற பெண்களுக்கு உறுதுணையாக இருத்தல் போன்றவை இப்பணிக்குழுவின் தனிப்பண்புகளாகும். திருஅவையில்